# தேசியம்



திங்கள் இதழ்

பங்குனி
1994



சிறந்த பொறியியல் சேவைக்கு நாடுங்கள்

# விநாயகர் பொறியியல் பேட்டை

கே. கே. எஸ் வீதி, கோண்டாவில் சந்தி

கோண்டாவில்

தேசியம் (திங்கள் இதழ்)

இதழ் 1

பங்குனி 1994

ஆதரவு -
சித்தவைத்தியக் கூட்டுறவுச்
சங்கம்



கௌரவ ஆசிரியர்
இ. சபாரத்தினம்


கதை, கட்டுரை, கடிதங்கள்
அனுப்பவேண்டிய முகவரி


ஆசிரியர், தேசியம்
66/2 இந்து மகளிர் வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



வெளியீடு, ஆசிரியர்
திருமலை யோகேந்திரம்

விலை ரூபா 15


## - குறி

தமிழீழத்தில் நாம் அறிய வேண்டிய, பகிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. தமிழ் மக்களின் கலை, பண்பாடு, அவர்தம் ஆக்கங்கள் சந்திக்கும் அழிவுகள், மரபுவழி வைத்தியமான சித்தவைத்தியம் போன்ற பல தரப்பட்ட விடயங்களைத் தேசியம் தாங்கிவரும். தமிழீழத் தாயகத்தினதும் தமிழினத்தினதும் விடுதலைக்கு தன்னாலான பங்கை அளிக்கத் தேசியம் விரும்புகின்றது. எல்லோரினதும் ஆதரவையும் தேசியம் வேண்டி நிற்கின்றது.

தேசியம்

# நாடும் மொழியும் நம் இரு கண்கள்

மார்ச்சு மாதம் முதலாம் நாளில் தென் தமிழீழத்திலும் வவுனியாவிலும், மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன

அடுத்தகட்டமாக வடமாகாணம் கிழக்குமாகாணம் இரண்டும் இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதற்கான தேர்தலும் நடத்தப்படலாம்

தென்தமிழீழத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஏதிலிகளாக இருக்கின்றார்கள் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு விட்டனர். பலா சிறையில் வாடுகின்றனர்.

பல்லாயிரக் கணக்கான சிறிலங்கா அரச படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் சனநாயக மற்றமுறையில் இத் தேர்தல்கள் நடைபெற்றன. இத்தேர்தலின் சனநாயகத் தனமை குறித்துப் பலவிதமான ஆய்வுகள் இனிச் செய்யப்படலாம தமிழினம் சனநாயக முறையில் வைத்த கோரிக்கைகள் எதையுமே சிங்கள அரசு என்றுமே மதித்து நடககவில்லை.

எம்மைப் பொறுத்தவரை தமிழர் தாயகம் என்பது என்றும் பிரிந்திருக்கவில்லை செயற்கையாகக் கூறப்படும பிரிவு என்பதை நாம் எனறும் எற்றுக் கொண்டதுமில்லை தேர்தல்கள் மூலமோ. அன்றி, போரின் மூலமோ: எம்தாயகத்தை யாராலும் பறித்துவிட முடியாது என்பதே வெளிபபடையான உண்மையாகும்.




**காசி. ஆனந்தன்**

தூயவெண் சங்குகள் கூவின! கூவின!
தோன்றின கவிதைகள்!
ஆயிரம் வகை வகை வீணைகள் ஆர்த்தன!
அதிர்ந்தன வேட்டுக்கள்!
தாயகம் தனியரசானது! தேனிசை
தவழ்ந்தது காற்றெல்லாம்!
சேயிழை தமிழ்மக்கள் வாய்மலர் இதழ்களும்
சிரித்தன! சிரித்தனவே!

நீள்நெடு மாளிகை வீடுகள் நிறைந்தன!
குடிசைகள் நீங்கினவே!
நாளெலாம் வாடிய ஏழையர் பூமுகம்
நகைத்தன! நகைத்தனவே!
ஆள்பவர் அடிமையர் உள்ளவர் அற்றவர்
ஆகிய பேதங்கள்
தூள்பட விடுதலை வந்தது! விண்மிசை
பறவைகள் துள்ளுதடா!

— கவிதை —

நன்றி "தமிழன் கனவு"



"போராட்டத்தின் எதார்த்த நிலையை, புறநிலை உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன் மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் விடுதலையுணர்வையும் ஊட்டி வளர்த்து மக்களின் கருத்துலகத்தைக் கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் அரிய சேவை ஆற்ற முடியும்"

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்
(1992 புலிகளின் குரல் வெளியீட்டிலிருந்து)




| | |
|---|---|
| காலம் | 12-02-1994 புதன்கிழமை |
| நேரம் | பொன்னானநேரம் |
| விடயம் | பெறுமதிமிக்கது |

அங்கிங்கெனாதபடி எங்கும் தானாகி எல்லோரையும் ஈர்த்துவிடும் ஆற்றல் மிக்க நோய்களுக்கு, மருத்துவத்தின் முகவுரையாக விளங்கும் சித்தர் வைத்திய முறைகள், மிகுந்த பயன் அளிக்கும். ஏழைத்தொழிலாளி முதல் செல்வர்வரை உலகு முழுவதும் உள்ளவர்களுக்கு கோலாக விளங்கக் கூடிய சித்த வைத்தியத்தின் பெருமையைக் கட்டிக்காத்தவர்கள் தமிழீழ மக்களும் மன்னருமே யாகும் என்பது வரலாறு.

## புதிய உறையில் பழைய கடிதம்

பல்லாண்டு காலமாகத் தமிழர் பேணி வந்த சித்த மருத்துவத்தின் மூலம்; எல்லாநோய்களுக்கும் சிகிச்சை அளிக்கலாம்; சித்த மருத்துவச் சேவையை விரிவு படுத்துவதினால் தமிழீழ மக்களின் மருத்துவத் தேவையை நாம் நிறைவு செய்து கொள்ள முடியும்.

எனது தந்தை சித்த வைத்தியராவர்: ஆங்கில மருந்துகளினால் சுகமடையாதவர்கள் பலர் தமிழ் மருந்துகளின் மூலம் சுகம் பெற்றனர். இவ்வாறு சித்த மருத்துவம் பயன்பட்டதை நான் நேரடியாகக் கண்டறிந்தேன்.

இவற்றைக் கூறியபடி மேசையில் இருந்த புத்தகத்தைக் காட்டினார். பிரபு பெரிய பரிகாரியார் சரித்திர ஆராய்ச்சி என்ற நூலில் காணப்பட்ட சில குறிப்புகளை மேய்ந்தேன்.

**புத்தகத்தில் கண்டவை**

1822ம் ஆண்டு முதல் 1916ம் ஆண்டு காலப்பகுதியில் பெரிய பரிகாரியார் பிரபு வை. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் வாழ்ந்தார்கள்.

1872ல் ஆங்கிலேயரான அமெரிக்கர் டாக்டர் கிறீன் அவர்கள் மானிப்பாய் ஊரில் இருந்த காலத்தில் கிறீன் அவர்களினால் தீர்க்க வியலாதவாறு பயங்கரமாக விருந்த நோயை சில நொடிப் பொழுதில் குணப்படுத்திப் பெரிய பரிகாரியார் சித்த வைத்தியத் துறையில் வெற்றி கண்டார்.

தமது இருபத்தைந்து வருட கால அனுபவத்தில் புதியதொரு வைத்திய முறையைக் கண்ட டாக்டர் கிறீன் பெரிய பரிகாரியாரின் வைத்தியத்திலும், அப்பெரியாரிலும் மதிப்புக் கொண்டார்.

1912ல் சேர் பொன் இராமநாதனின் சண்பார்வையில் ஊறு ஏற்பட்டது. இதற்குப் பெரிய பரிகாரியாரின் மருந்தை ஒரு முறை வாங்கி இராமநாதன் அவர்கள் பாவித்தார்.

வேறு மருந்தினால் நலம் காணாத இராமநாதன் அவர்களின் நோய் பெரியபரிகாரியாரின் மருந்தினால் பூரணமாகத் தீர்ந்தது. இதன் காரணமாகப் பெரியபரிகாரியார் சேர் பொன் இராமநாதன் அவர்களின் மதிப்பிற்குரியவரானார்: இத்தகைய மனங்கவர்ந்த பெரியாரின் உறவால் யாழ் பல்கலைக் கழகத்தில், சித்த வைத்திய பீடத்தை அமைக்க வேண்டும் என்ற கருத்து இராமநாதனுள்ளத்தில் உருவாகியது.'' ஆகிய செய்திகளை இந் நூலிருந்து அறிய முடிந்தது.

பாலசுப்பிரமணியம் அவர்களின் எண்ணக் கருத்துக்களை அவரோடு உரையாடிய போதில்; பின்வருமாறு அறிந்தேன்.

□ ஆங்கிலேயர்களின் வருகையின் பின்னர், எமது நாட்டில் அவர்களுடைய மருந்துச் சாலைகளிலே வேலை செய்த தமிழர்கள் பலர் ஆங்கில மருந்துகளைக் கையாளத் தெரிந்து கொண்டார்கள். நாளடைவில் இவர்கள் ஊர்களில் வைத்தியம் செய்யும் தகுதி பெற்றனர். இதனால் சித்த மருத்துவத்தின் தேவை மறையலாயிற்று.

□ சித்த மருத்துவம் தமிழர்களுடைய வைத்திய முறையாகும். இதன் தனித்துவத்தைக் காத்து, இம்மருத்துவக் கல்வியைப் பிறருக்குப் கற்பிக்கும்போது, சித்த மருத்துவத்தின் தன்மையைச் சிதைக்காமலும், இதனோடு வேற்று மருத்துவ முறைகளைக் கலக்கச் செய்யாமலும், இம்மருத்துவத்தின் நோக்கு நிறைவு பெறத்தக்க வகையில் சித்த மருத்துவக் கல்வியைப் புகட்டுவதற்கு - நான் இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்ற நிலையத்தில் முயன்று வருகின்றேன். இங்கே சில மாணவ, மாணவியர்கள் கல்வி பெற்று வருகின்றனர். இவர்களின் சேவையை மக்கள் பெறும்போது சித்தமருத்துவத்தின் தனித்தன்மையையும் தெரியவரும், என்று நம்புகின்றேன்



திரு. க. பாலசுப்பிரமணியம்

□ மிக்க நீண்ட காலமாக எமது நாட்டிலே இருக்கின்ற நாட்டுப்புற வைத்தியர்கள் எல்லோருமே சித்த மருத்துவம் என்று; தாங்கள் குறிப்பிடுகின்ற மருந்து முறையைக் கையாளுகின்றார்களா? என்று கேட்டபோது!

பாரம்பரியமாகத் தமிழர்கள் முழுமையாகச் சித்தமருத்துவ முறையையே பாவித்து வருகின்றார்கள். தென்னிந்தியாவில் ஆரிய வருகையின் பின்னர் ஆயுர்வேதம் மக்களிடம் பரவியது. இந்திய அரசும் ஆயுர்வேதத்தை வளர்த்தது — என்கிறார். திரு. க. பாலசுப்பிரமணியம்.

மேலும் ஆயுர்வேதக் கல்லூரிகளில் ஆயுர்வேதமும், சித்த வைத்தியமும் ஒன்றுபட்ட நிலையில் வைத்தெண்ணப்பட்டே கல்வியாகப் போதிக்கப்பட்டது. இங்கு கற்றுத் தேறியவர்களும் பெரும்பான்மையாக ஆயுர்வேத மருந்துகளையும், ஆங்கில மருந்துகளையும், மக்களுக்குக் கொடுத்து வருகின்றனர்.

இவர் யாழ்மாநகர சபையின் சித்தவைத்திய அதிகாரியாகவும் இலங்கா சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றத் தலைவராகவும், சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு இயங்கும் சித்த வைத்திய அராய்ச்சி நிலையத்தின் பிரதம ஆராய்ச்சியாளராகவும் இப்போது இருக்கின்றார்

## ஆக்கமுள்ள முயற்சி

- ☐ சித்தவைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி இவர் கூறும் போது—
- ☐ தமிழ் பாரம்பரிய சித்த மருத்துவ அடிப்படையில் நோய்களைக் குணமாக்க, மருந்துகளை உருவாக்குதல்
- ☐ பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் உற்பத்திகளை சித்த மருந்தாக்கும் நன்முயற்சிகளைச் செய்தல்.
- ☐ உள்ளூர் மூலிகைகளை வளர்த்தல், பேணுதல், சேகரித்தல் மக்களிடம் இதுபற்றிக் கூறுதல்.
  சித்த மருத்துவத் துறையின் மேம்பாட்டுக்கான பிரச்சாரம்; ஆய்வுகளைச் செய்தல்
- ☐ இவைகளும், இவைதவிர்ந்த வேறு பணிகளையும்; எமது சங்கம் மேற்கொண்டிருக்கின்றது:

இச்சங்கத்தின் தலைவராகக் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஸ்ரீ. சபாரெத்தினம் அவர்கள் இருக்கின்றார். பணிப்பாளராகவும், செயலாளராகவும். வைத்தியச் சாரணி திருமதி. இராதாதேவி விளங்குகின்றார்.

சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தின் பேராளர் அங்கங்களாக இருக்கும் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள்; சமாசம், என்பன சித்த மருத்துவம் சிறப்புறத் தம் பங்கையும்; செயலூக்கத்தையும் புரிந்து வருகின்றன.

---

வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் வைத்திய ஆலோசனையில் இயங்கும் சித்த மருந்துச் சாலையின் உற்பத்திகள் சிறப்பாகப் பயனளிப்பதுபோல வே. அவரின் கருத்துக்களும் தமிழ்மக்களுக்குப் பயன் தருவதாக அமைந்தது. — மேலும் அவர் தொடர்ந்தார்.

---

1926ல் கௌரவ கே: பாலசிங்கம் அவர்கள் சுதேச வைத்திய அதிகார சபைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார். இதன் மூலம் இலங்கையில் சித்த வைத்தியம் தமிழர்களின் வைத்திய மாகப் பேணப்படும் நிலை தோன்றியது.

எமது சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களினால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் உறுப்பினர்களுக்கு; மருந்துக் கலவையாளர் பயிற்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். சித்த வைத்திய மருந்துச் சாலையில் மருந்துகளை விற்பதற்கு அடிப்படைத் தகுதியாக மருந்துக் கலவையாளர் தகமை அமைந்துள்ளது. மக்களுக்கும், வைத்தியர் களுக்கும், மருந்துச் சாலைக் தம் இணைப்பாளர்களாக தேசியச் சுகாதாரத் தொண்டர்கள் பயிற்று விக்கப் படுகின்றனர்: இதனால் தமிழீழ மக்களுடைய அடிப்படைச் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

ஆராய்ச்சி மன்றத்தில் சித்த மருத்துவமானது வைத்தியக் கோட்பாடுகள், வைத்திய இலக்கியம், வைத்திய வரலாறு, நோய்கள், மருந்துகள் என்ற ஐந்து துறைகளாகப் பிரிக்கப்பட்டு ஆர்ாயப்பட்டு வருகின்றது.

இவ்வாறான எண்ணக் கருத்துக்களை இருமணி நேரச் சந்திப் பின் மூலம் பெற்றுக் கொண்டநான் நிலையத்திலிருந்து வெளியே வந்தேன்.

எமது நாட்டு மக்கள் சுகவாழ்வு பெற உதவும் இச்சேவையும், தமிழர் மருந்தும் வளரவேண்டும் என்ற எண்ணம் மனதில் நிறைந்தது.

சந்தித்தவர் — இடலூர்வழுதி

# சிந்து நதியை வழுக்கை ஆற்றில் தேடுவோம்



செல்வி மு. உமாசங்கரி
(வரலாற்றுத்துறை விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்)

சிந்து வெளியில் நிலவிய திராவிட நாகரீகம் யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்துள்ளது என்ற கருத்து வலுவாக இக்காலத்தே நிலை பெற்றுள்ளது. இப்பண்பாடு தொடர்பான விளக்கங்கள் மேலும் அறியப்பட வேண்டிய தேவை இப்போது காலத்தின் தேவையாகவுள்ளது.

**1980** களின் ஆரம்பத்தில் ஆனைக்கோட்டையில் இடம் பெற்ற தொல் பொருள் ஆராய்ச்சி மூலம் சில தகவல்கள் வரப் பெற்றுள்ளன. ஆனாலும் அகழ்வாராய்ச்சி தொடர்பான அறிக்கைகள் கூடுதலாகக் கிடைத்தமையினால் இது குறித்த தெளிவான அறிவை மக்களுக்குக் கூறமுடியவில்லை. இருந்தாலும், கிடைத்துள்ள தகவல்களை ஆராய்ந்து பார்த்தால் சிந்து வெளியில் நிலவிய நாகரீகம் யாழ்ப்பாணத்திலும் வளர்ந்து தஞ்சமடைந்திருக்கின்றது என்பதை உணரமுடிகின்றது

சிந்து நதியை மையமாகக் கொண்டு எழுச்சிபெற்ற சிந்து வெளி நாகரீகம் உலகப் புகழ் பெற்றதாகப் பல வரலாற்று ஆசிரியர்களாலும் சிறப்பித்துக்கூறப்படுகின்றது சீரானவாழ்க்கை, ஒழுங்கமைப்பிலான கட்டிட அமைப்புகள், போற்றத்தக்க வழிபாட்டு முறைகள் இவையாவும் அங்கு காணப்பட்டன.

இத்தகைய சிறப்பு மிக்க சிந்து வெளி நாகரீகம் ஆரியப் படையெடுப்பு, வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களால் அழிவடைந்தது. அவ்வாறு அழிவடைந்த காலங்களில் அங்கிருந்து அரபியக் கடல்மார்க்க

மாக வந்த மக்களில் ஒரு பகுதியினர், இலங்கையின் வட பகுதியில் தங்கினர். இவர்கள் தமது கலை பண்பாடு களையும் கூடவே எடுத்து வந்து யாழ்ப்பாணப் பகுதியில் வாழ்விற்காக அடைக்கலம் தேடினார்கள். யாழ்ப்பாணமும் நன்கு அடைக்கலம் கொடுத்தது.

இறந்தோரை அடக்கம் செய்தல் என்பது, பண்பாட்டு வளர்ச் சியின் அளவுகோலாகத் திகழ்கின்றது. ஆதியில் மனிதன் மிருகங்களைப் போன்றே மனிதர்கள் இறந்தாலும் அந்த இடத்தில் எறிந்து விட்டுச் சென்றான். பின்னர் அதனைப் புதைத்தான்.

காலம் போக அந்த இடத்திற்கு பூக்கள் போட்டு வணங் கினான். புதைந்ததும் பூக்கள் போட்டு வணங்கியது என்பது ஓரிரு நாட்களில் நடைபெற்ற வளர்ச்சியில்லை. லட்சக் கணக்கான ஆண்டு காலம் கழிந்தே இத்தகைய பண்பாடு வளர்ந்தது. இவ்வாறான பண்பாட்டு அடிப்படை சிந்துவெளியிலும் நிலவியது.

இங்கும் இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது அவர்கள் அணிந்ததாகக் கருதப்படும் ஆடை அணிகளையும், அவர்கள் உட்கொண்ட உணவுவகைகளையும் அடக்கத்துள் வைத்தனர். யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த தொல் பொருட் சான்றுகள் இவற்றைக் காட்டி நிற்கின்றது.

இதனைவிட புறநானூற்றிலும், இது பற்றித் தெரிவிக்கப் பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிக காலந்தொட்டு இப்பண்பாடு காணப்பட்டாலும்; தென் இந்தியாவில் புதிய கற்காலத்திலும்; அதன் பின் பெருங் கற்காலத்திலும் இந்த வழக்கம் மக்களின் அடக்க முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டதை,

''இடுகவென்றோ சுடுகவொன்றோ படு குழிப் படுக்க'' என்று புறநானூறும்,

''இடுவோர் சுடுவோர் தொடுகுழிப் படுப்போர்'' என்று மணிமேகலையும் குறிப்பிடுகின்றது.

இத்தகைய வழக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் பேணப்பட்டதோடு வரலாற்றுக் காலத்திலும் இக் கலாச்சாரம் நீடித்து நிலைத்திருந்தது என்பதை ஆனைக்கோட்டை, மாந்தை, போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய தகவல்களின் அடிப்படையில் ''அடைக்கலப் பிரதேசம்'' பற்றிய பண்பாட்டினை அறிந்து கொள்ளலாம். ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு மனித எலும்புக் கூடுகளும், அதனோடு கண்டெடுக்கப்பட்ட வெண்கல முத்திரை ஒன்றும் இக்கருத்தை வலுப்படுத்துகின்றன.

வெண்கல முத்திரையைவாசித்த பேராசிரியர்-கா. இந்திரபாலா இது ஒரு இருமொழிச் சாசனம் என்றும், முதல் வரியில் சிந்துவெளியை ஒத்த சித்திர எழுத்துக்கள் காணப்படுகின்றன என்றும், இத்தகைய சித்திர எழுத்துக்கள் பெருங்கற்கால மட்பண்டங்களிலும் உண்டெனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சித்திர எழுத்துக்குக் கீழுள்ள பிராமி எழுத்துக்களை வாசிப்பதன் மூலம் சித்திர எழுத்துக்களை வாசிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ் எழுத்துக்களை அவர் கோவேதன், கோவேந்தன் என்று வாசித்துள்ளார். இதிலிருந்து திராவிட மக்கள் அதுவும் கி.மு. மூன்றாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் பிராமி மொழியை அறிந்திருந்தனர்; என்பதை அறிய முடிகின்றது. அத்துடன் சிந்துவெளியில் நிலவிய பண்பாடு இங்கு தஞ்சமடைந்தது என்புதோடு அங்கு பழக்கத்திலிருந்த எழுத்தை வாசிக்க இங்கு பேணப்பட்ட பண்பாடு உதவுகிறது என்பது கவனிக்கத்தக்கது.

மேலாய்வுகளின் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டே இதுவரை நாம் எமது பண்பாடு குறித்த அறிவினைப் பெற்றிருந்தோம்; எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள் தமிழர் பண்பாடு குறித்த புதியதொரு கருத்தை மக்களுக்குத் தந்துள்ளன. ஆனால் அவை மேலும் வலுப்பெற ஆதாரங்கள் பல வேண்டும்.

அண்மையில் தமிழகத்திலிருந்து வரும் வாராந்த சஞ்சிகை ஒன்றில் ஆனைக்கோட்டையில் நிலவிய பண்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது

பேராசிரியர் இரா மணிவண்ணன் ''ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை வாசிக்கப்பட்டது என்பது சிந்து வெளி எழுத்து வாசிக்கப்படலாம் என்ற நம்பிக்கையைத்தந்துள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் பழம்பெரும் உலகப் புகழ்பெற்ற நாகரீகங்களில் ஒன்றாகக் கூறப்படும் சிந்து வெளிப் பண்பாடு யாழ்ப்பாணத்தில் பேணப்பட்டது என்பது பெருமைக் குரியதே. இத் தகைய பெருமைக்குரிய பண்பாடு குறித்த தடயங்களை, மேலும் தேடுவது அவசியமான தேவைகளில் ஒன்றாகும்.



# எங்கள் நிலத்தில் சிங்கள யானைகள்

- பானுபாரதி -

## முன்னோட்டம்

தமிழர்களின் பூர்வீக வாழ்விடம் தமிழீழம் என்பதையும்; இன்றைய இலங்கையையும் இந்தியாவையும் ஒன்றாகக் கொண்ட பெரும் நிலப்பரப்பு லெமூரியாக் கண்டம் என்ற பெயரில் இருந்தது என்பதையும், உலக வரலாறு உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது, கண்டி— கோட்டை — யாழ்ப்பாணம் — என்ற மூன்று தனித்தனி அரசுகளும் தமிழீழத்தில் வன்னியென்ற குறுநில அரசும் இருந்தன,

1619ன் நடுப்பகுதியில் - யாழ்ப்பாண நல்லூரைத் தலைநகராகக் கொண்டு சங்கிலிய மன்னன் ஆட்சி செய்த வேளையில் போர்த்துக்கேயர்கள் சங்கிலியனைச் சிறைப்பிடித்தனர். இந் நிகழ்ச்சியின் பின்பு தமிழீழத்தில் - தமிழர்களுடைய சுதந்திர வாழ்வும், அரசும் நிலை குலையத் தொடங்கிற்று.

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழீழ அரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தில், சிலாபம் தொட்டுப் பாணமை வரையில் உள்ள வடக்கு, வடமேற்கு, கிழக்குக் கரை



யோரப் பகுதிகள்; தமிழர்களின் வாழ்விடங்களாகவும், அவர்களின் தன்னாதிக்க உரித்திடமாகவும் இருந்தன. கிழக்கே பழுகாமம், யாணமை முதலிய இடங்களில் வன்னியர்கள் ஆட்சித் தலைவர்களாக இருந்தனர்.

1619ல் இருந்து 1658 வரை போர்த்துக்கேயர், தமிழீழத்தின் நிருவாகத்தைத் தமக்குள் தக்க வைத்திருந்தனர். 1638 ல் ஒல்லாந்தப் படைகள் மட்டக்களப்புத் துறையைக் கைப்பற்றின. 1658ல் தமிழீழப் பகுதிகள் யாவும் ஒல் வசமாகியது.

ஒல்லாந்தர் தாம் கைப்பற்றிய பகுதிகளை ஆறு ஆட்சி மாவட்டங்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு ஆட்சிப் பிரிவுக்கும் ஒவ்வொரு ஆட்சித் தலைவரை அவர்கள் நியமித்தனர்.

## ஆறு ஆட்சி மாவட்டம்

பெந்தோட்டை ஆறு தொடக்கம், வடக்கே தெதுறு ஓயா வரைக்கும் உள்ள கொழும்பு ஆட்சி மாவட்டம்.

தெதுறு ஓயா தொடக்கம், மோதரகம் ஆறு வரையுமுள்ள புத்தளம் - கற்பிட்டி ஆட்சி மாவட்டம்.

மோதரகம் ஆறு தொடக்கம், வடக்கே யாழ்ப்பாணக் குடாநாடு வன்னிப் பகுதியை உள்ளடக்கிக் கிழக்குக் கரையில் கொக்கிளாய் வரை யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம்.

கொக்கிளாய் தொடக்கம் கிழக்குக் கரையோரமாகத் தெற்கே வெருகல் ஆறு வரையுமுள்ள திருகோணமலை ஆட்சி மாவட்டம்.

கும்புக்கன் ஆற்றிலிருந்து தெற்கேயும் மேற்கேயுமாகவுள்ள உரோகணமும், பெந்தோட்டை ஆறு வரை பரந்ததுமான காலி ஆட்சி மாவட்டம்.

வெருகல் ஆற்றிலிருந்து கரையோரமாகத் தெற்கே கும்புக்கன் ஆறு வரையுமுள்ள மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம்.

என்ற இந்த ஆறு ஆட்சி மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆட்சித் தலைவர்கள் நிருவாகம் செய்வதற்கு நியமிக்கப்பட்டார்கள். இவ்வாட்சிப் பிரிவுகளை உள்ளடக்கி மூன்று நீதிப் பிரிவுகளை ஏற்படுத்தினர்.

இந் நீதிப்பிரிவினுள் யாழ்ப்பாண மட்டக்களப்பு, திருக்கோண மலை ஆட்சி மாவட்டம் ஆகிய மூன்றும் ஒரு நீதிப் பிரிவாக ஆக்கப்பட்டது. யாழ்ப்பாணம் இதன் தலைமை நிலையமாக விளங்கியது.

இலங்கைத் தீவில் இரு இனங்கள், தனித்தனி நிலப்பகுதிகளில், ஆள்புலமும் ஆட்சியுரிமையும் உடையனவாக விளங்கியதை பிரிட்டிசாரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் ஆளுனராகவிருந்த நோர்த் அவர்களின் செயலாளர் கிளெக்கோர்ண் என்பவர் 1799 யூன் மாதம் முதலாம் திகதி எழுதிய செய்திக் குறிப்பு விளக்குகின்றது.


''இலங்கைத் தீவானது இரு வேறு நாட்டினங்களால் வெவ்வேறு பகுதிகளாக உடமை கொண்டாடப்பட்டது. ஆட்சி செய்யப்பட்டது. இத்தீவின் நடுப்பகுதியும் தெற்குப்பகுதியும், வளவை ஆற்றில் இருந்து சிலாபம் வரையிலுள்ள மேற்குப் பகுதியும், சிங்களவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும்- இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபாரிகளால் (தமிழர்களால்) ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இவ்விரு நாட்டினங்களும் - மதத்தாலும், மொழியாலும், வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டிருந்தன.'' - என்ற இக் குறிப்புரை, தமிழாக்கத்தில் இங்கு தரப்பட்டுள்ளது.

## தமிழரின் தாயகத்தை வடக்குத் தெற்கு என்று வேறுபடுத்தி பிரிட்டிசு அரசு பிரித்தது

1-10-1833ல் தமிழர்களின் வாழ்விடப். பாரம்பரிய பிரதேசமான தமிழீழம் — வடக்குக் கிழக்கு மாகாணங்கள் என்று பிரிட்டிசாரால் பிரிக்கப்பட்ட காலத்தில் மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்தி என்ற ஐந்து மாகாணங்கள், இலங்கை முழுவதிலும் உருவாக்கப்பட்டன.

அவ்வேளையில், உருவான கிழக்கு மாகாணத்தினுள் தற்போதைய பொலநறுவ மாவட்டத்தினுள் இருக்கும் தம்மன்கடுவப் பகுதியும், பதுளை மாவட்டத்தினுள் இருக்கும் விந்தனைப் பகுதியும், அடங்கியிருந்தன. இவ்வாறு தமிழர் வாழும் தாயகத்தை மெல்லக், கையாடல் செய்யச் சிங்கள அரசு தொடங்கிற்று.

1790 - ஆம் ஆண்டில் ஒல்லாந்த ஆதிக்கத்தில் அமைந்த நீதி மாவட்ட வரைபடம் இதுவாகும். 1789ம் ஆண்டின் ஜே. டு. பெரொனின் படத்தைத் தழுவியது.



இங்கே கறுப்பு நிறத்தில் காட்டப்பட்ட பகுதி 1790-ல் ஒல்லாந்தரால் யாழ்ப்பாண நீதி மாவட்டம் என்று அழைக்கப்பட்டது.



நிருவாக வசதிகளுக்காக இலங்கையின் கிழக்குப் பகுதியான தென் தமிழீழத்தை திருகோணமலை, மட்டக்களப்பு என்று பிரித்தது போல 1961 ல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம் என்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சிறிலங்கா அரசு இருதுண்டு படுத்தியது.

1961 இல் அம்பாறை மாவட்டம் உருவான போது மட்டக்களப்பு மாவட்டத்தோடு இருந்து வந்த ஏறத்தாள 900 ச. கி மீட்டர் களைக் கொண்டதான விந்தனைப் பகுதி பதுளை மாவட்டத்தின் கீழ் நிருவாக அலுவல்களுக்காக அரசால் சேர்த்து விடப்பட்டது. 1970 ன் முற்பகுதியில் திருமலை மாவட்டத்தின் வடபகுதி ஊர்கள் சிலவும் (புல்மோட்டை, தென்னமரவடி, பன்மதவாச்சி ஆகியன) அனுராதபுர மாவட்டத்துடன் நிருவாக அலுவல்களுக்காக இணைக்கப்பட்டன என்ற செய்தியையும் வாசகர்கள் தெரிந்து கொள்ளுதல் நன்று.

## மூன்று மாவட்டத்தும் இப்போதுள்ள எல்லைகள்

### திருமலை மாவட்ட எல்லை

வடக்கில் — கொக்கிளாய் ஆறு
தெற்கில் — வெருகல் ஆறு
கிழக்கில் — கடல்
மேற்கில் — பொலநறுவை, அனுராதபுரம்

### மட்டக்களப்பு மாவட்ட எல்லை

வடக்கில் — வெருகல் ஆறு
தெற்கில் — பெரியகல்லாறு (ஊர்)
கிழக்கில் — கடல்
மேற்கில் — அம்பாறை

### அம்பாறை மாவட்ட எல்லை

வடக்கில் — பெரியகல்லாறு (ஊர்)
தெற்கில் — குமுக்கன் ஓயா (ஆறு)
கிழக்கில் — கடல்
மேற்கில் — மொனறாகலை, பதுளை, பொலநறுவை ஆகிய இடங்கள்.

## வாசகர்கள் அறிதலுக்காக குடிசன மதிப்பீடு

பிரிட்டிசு அரசின் ஆளுகையில் டொனமூர் அரசியற் திட்டத்தின் இந்நாடு இருந்த வேளையில் 1936ல் தனிச் சிங்கள மந்திரி



சபை உருவானது. 1948 ன் பின் சிங்கள அரசால் தமிழீழத்தில் ஏற்ப் படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியமர்த்தல்கள் தமிழ் இன விகிதாசாரத்தை எவ்வாறு மாற்றியமைத்துள்ளன என்பதைப் பின் வரும் புள்ளி விபரங்களில் காணலாம். ( 1983 ம் ஆண்டின் பின்னர் தமிழீழத்தின் வடகிழக்கு மாநிலத்தில் குடிசன மதிப்பு முறையாக எடுக்கப்படவில்லை 1983 முதல் இக்கட்டுரை எழுதப் படும் 1994 ம் ஆண்டான இன்று வரை அமைதியற்ற சூழ்நிலையையே சிறிலங்கா அரசு தமிழீழத்தில்தோற்றுவித்துள்ளது. தமிழீழத் தமிழ் மக்கள் தம் வாழிடம்விட்டு வெளியிடம் சென்றும், வதிவிடம் விட்டு இடம் பெயர்ந்தும் வாழ்கின்றமையினால், உரிய வகையில் குடிசன மதிப்புத் தரவு கிடைக்காதுள்ளது

## திருக்கோணமலை மாவட்டம்

| ஆண்டு | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் | ஏனையர் |
|---|---|---|---|---|
| 1881 | 14394 | 5746 | 935 | 1122 |
| 1921 | 18586 | 12846 | 1501 | 1175 |
| 1946 | 33795 | 23219 | 15706 | 3206 |
| 1053 | 37517 | 28616 | 15296 | 2488 |
| 1963 | 54050 | 42560 | 39950 | 1660 |
| 1971 | 71749 | 59924 | 54744 | 1828 |
| 1981 | 91510 | 74403 | 86341 | 2539 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| ஆண்டு | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் | ஏனையர் |
|---|---|---|---|---|
| 1881 | 61014 | 37255 | 5021 | 2077 |
| 1921 | 84665 | 63146 | 7243 | 3655 |
| 1946 | 102264 | 85805 | 11850 | 3267 |
| 1953 | 130381 | 106706 | 31174 | 2232 |
| 1963 | 141590 | 45920 | 6580 | 2099 |
| 1971 | 181527 | 61524 | 11548 | 2122 |
| 1981 | 238216 | 79317 | 10646 | 2720 |

*1953ம் ஆண்டு வரையுள்ள புள்ளி விபரங்கள் 1961ல் உருவான அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியுள்ளன.*

## அம்பாறை மாவட்டம்

| ஆண்டு | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் | ஏனையர் |
|---|---|---|---|---|
| 1963 | 50480 | 98270 | 62160 | 822 |
| 1971 | 62290 | 127119 | 82280 | 916 |
| 1981 | 79725 | 161481 | 146371 | 1209 |

*1921ம் ஆண்டில் 92 — 96 வீதமாகவிருந்த தமிழ் மக்களின் விகிதத் தொகை 1981ல், 74.42 வீதமாகமாறியது.*

1898 இல் திருமலை மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்த ஆங்கிலேயரான திரு. சி. எம். லஷிங்டன் - 'சிங்களவர் ஒருவரைக் கூடத் திருக்கோணமலையில் காண்பது அபூர்வம்-' என்று தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருந்தார். அந்த அளவிற்கு தமிழர்களின் தாயகத்தில் சிங்களவர் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தமிழ்மக்களாகிக் கலந்து விட்ட நிலையில் தமிழர்களாகி வாழ்ந்தார்கள்.

1948 மாசி 4 த் திகதியன்று முழுமையான ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிசாரிடமிருந்து ஏற்ற இலங்கை அரசு. 1948 மார்கழியில் மலையகத் தமிழர்களின் உயிரனைய குடியுரிமையை இழக்கச் செய்வதற்கான ஆணையைக் கொண்டு வந்தனர்.

வரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்த தமிழர்களுடைய தாயகத்தில் மெல்ல மெல்லச் சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வரும் திட்டமும் கருக்கட்ட ஆரம்பித்தது. தாய்மொழியான தமிழுக்கும் தமிழினத்திற்கும் தமிழர் தாயகத்திற்கும் சிதைவைக் கொடுக்கும் நடவடிக்கைகளைச் சிங்கள அரசு செய்ய ஆரம்பித்தது. எங்கள் தாயகத்து விளை நிலங்களில் சிங்கள அரசாகிய யானைகள் அசைந்து வந்து நடை போடத் தொடங்கின






## சிறுகதை

*"பாடசாலைப் பியோன், வெளி நாட்டுக் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்த போது, பரிமளம் ரீச்சர், 'குமுதத்தை' மேசையில் போட்டுவிட்டு கடிதத்தை ஆவலோடு படித்தாள். மகன் சுவீஸில் இருந்து எழுதியிருந்தான்....*

**க. சிவராஜா**

சூரியன் புறப்படும் இடத்தில், புதிதாய் பெயின்ரிங் படிக்கும் சிறுமி அப்பியது போல், திட்டுத்திட்டாக கருமேகம் நகராமல் நின்றது. வாளியுடன் சுந்தரம் கிணற்றடிக்கு வந்தான். நேற்று சிறிது நேரம் தாமதமாக வந்ததால் கிணற்றடி தீர்த்தக் கேணி போன்று, கலகலக்க... குளிக்காமலேயே திரும்பிவிட்டான்.

சாரத்தை மாற்றி துவாய்த் துண்டைக் கட்டிக் கொண்டு தண்ணீரை அள்ளி தலையில் ஊற்றிக் கொண்டான். அடிக்கடி வேலியால் எட்டிப் பாதையைப் பார்த்தான். ஒவ்வொரு பார்வையும் ஏமாற்றத்துடன் திரும்பியது.

.ச்சி .. இந்தப் பெட்டை... இவ்வளவு நேரமும் என்ன செய்யுது எழுப்பிப் போட்டல்லே வந்தனான்.'' மனதுக்குள் சொல்லிக் கொண்டு, சவர்க்காரத்தை உடம்பில் தேய்த்த போது, பின்னால் வாளிகள் குடங்களின் மோதல் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பெண்கள் சிலர் பல்லு விளக்குகிறம் என்று சொல்லி கன்னத்தைக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தனர்

இனி அதிக நேரம் கிணற்றடியில் நிற்க முடியாது என்பதை உணர்ந்து அவசர அவசரமாக குளித்து துண்டை மாற்றிக் கொண்டு நடக்கையில் சுந்தரத்திற்கு மகள்மீது கோபம் கோபமாக வந்தது.

"ஏனப்பா இவள் தாரிணி குளிக்க வரவில்லை... எங்கடை இணேறே, வாளியை நெடுக பிடிச்சுக்கொண்டு நிக்க... வீட்டுக்குள் நுழைந்தபடி சுந்தரம் கேட்டான்.

" ஏனெண்டு நீங்கள்தான் கேளுங்கோ... தான் இனிப் பள்ளிக்கூடம் போகமாட்டாளாம். ." மனைவி தேவி சொன்னாள்.

"தாரிணி..." சற்று இரைஞ்சே கத்தினான் சுந்தரம். பதிலேதும் பேசாமல் முன்னே வந்து நின்றாள் அந்த பத்துவயதுச் சிறுமி.

"...என்ன பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு சொன்னியாம்... ஏன்... உன்னுடைய படிப்பெல்லாம் மூடிஞ்சு போச்சோ... "

"...நான் படிக்கமாட்டன் எண்டு சொல்லேல்லை... அந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்க மாட்டன் அங்கை என்னை அகதி எண்டு சொல்லுகினம்..." அவள் குரலில் அழுகை எட்டிப் பார்த்தது. சுந்தரத்திற்கு, அப்பதான் அறிவில் நெருடியது. தாரிணி, தன்னை மற்ற பிள்ளைகள் அகதி எண்டு சொல்லி கேலிபண்ணுவதாக அடிக்கடி கூறி கண்கலங்கி இருக்கிறாள்.

அந்த நேரங்களில் "...சரி...சரி...நீ அழாமல் போ... நான் இண்டைக்கு பள்ளிக்கூடத்துக்கு வந்து பிரின்ஷ்பலிடம் சொல்லுறன்" என்று மகளைப் பலமுறை தேற்றி அனுப்பி இருக்கிறான். ஆனால் பள்ளிக் கூடப் பக்கம் போக அவனுக்கு நேரமே இருக்கவில்லை.

இன்று மகள் பிடிவாதமாகவே, மகளை அணைத்து அன்புடன் சொன்னான் "...பிள்ளை நீ பள்ளிக்கூடம் போய்ச் சேருவதற்குள்ள நான் அங்கை வந்திடுவன்... பிரின்சிப்பாலிடம் சொல்லி உன்னை அகதி எண்டு பகிடி பண்ணின பிள்ளைகள் எல்லாருக்கும், நல்ல அடிபோடச் சொல்லுறன் -- நீ போ அம்மா..."

தகப்பனின் சொல்லை நம்பிய தாரிணி அரை மனதுடன் பள்ளிக்கூடம் புறப்படத் தயாரானாள்.

"இஞ்சாருங்கோ எப்படியும் இண்டைக்கு பள்ளிக்கூடம் போய் பேசிப்போட்டு வாருங்கோ -- அகதி, அகதி என்ன பகிடி; நாளைக்கு

இந்த இடத்துக்கு ஆமிவந்தால், இஞ்சை உள்ளவை என்ன செய் வினம்..." "தேவி தணிந்த குரலில் கணவனிடம் முறையிட்டாள்:
"தேவி! உனக்கும் விளங்கவில்லை .. நாங்கள் ஆரும் அகதியில்லை வீட்டை விட்டுட்டு இஞ்சாலை வந்திருக்கிறம். இதுவும் எங்கடை இடம்தான், அந்நிய இடமில்லை,

"இதுகளை எனக்குச் சொல்லி என்ன பிரயோசனம். அந்தப் பிரின்சிப்பாலிடம் சொல்லி, பிள்ளையளுக்குச் சொல்லச் சொல் லுங்கோ...

தாரிணி குறுகுறுத்த மனத்தோடு, பாடசாலை வளவுக்குள் கால்வைத்தாள் நேற்று அகதி என்று சொன்ன பெண் பிளைப் பிள்ளை முன்னே வந்தாள். தாரிணி பலவந்தமாக சிரிப்பைவர வழைத்து அவளைப் பார்த்துச் சிரித்தாள். அவள் சிரியாமல் வில கிச் சென்றாள்.

வகுப்பு ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. அந்த வகுப்பு ஆசிரியையான 'பரிமளம் ரீச்சர், தனது பாடத்தில் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

"...யாழ்ப்பாணத்திற்கு, யாழ்ப்பாணம் என்று ஏன் பெயர் வந்தது?..." ஒவ்வொரு பிள்ளையாக எழுந்து பதில் தெரியாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றனர்... தாரணியின் முறை வந்த போது, தாரிணி எழும்பி சரியான பதிலைச் சொன்னாள்:

".. பார்த்தியளே. அந்த அகதிப் பிள்ளை பாடத்திலை எவ் வளவு கவனமாக இருக்குது... நீங்கள் எங்களைப் பிராக்கட்ட வல்லோ இஞ்சை வா'றியள்..." ரீச்சர் கோபத்துடன் சொன்னாள்

"அகதிப்பிள்ளை என்று சுட்டிக்காட்டியது, தாரிணிக்கு நெஞ் சில் சுருக்கென்று தைத்தது. தன்னை யொத்த பிள்ளைகள்தான் சொல்லுகிறார்களென்று பார்த்தால் இப்ப ரீச்சரும் சொல்கிறார் அவளுக்கு வேதனை நெஞ்சு முட்டிக் கொண்டு வந்தது.

ரீச்சர் அடுத்த கேள்வியைக் கேட்டார்; .....தமிழீழத்தையும், இந்தியாவையும இணைக்கும் நீரிணைக்குப் பெயர் என்ன?

முதல் கேள்வியைப் போன்றே – ஒவ்வொரு பிள்ளைகளும் கண்களை புரட்டிக் கொண்டு எழுந்து நின்றன.

...மீண்டும் தாரணியின் முறை...

"...பாக்கு நீரிணை... என்ற பதிலை வெளியே எறிய... நாக்கு துடித்த வேளையில் அதனை அடக்கி மௌனம் சாதித்தாள். பதிலைச் சொன்னால், ரீச்சர் மீண்டும் அகதி என்று நெருப்பால் சுடுவாள் — அதிலும் பார்க்க தெரியாமல் நின்டு பிரம்பால் அடி வாங்குவது பரவாயில்லை... இண்டைக்கு ஒரு நாளைக்குத்தானே இண்டையோடை இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வாறதில்லை...

"...என்ன... ஒருத்தருக்கும் தெரியவில்லையோ... எல்லாரும் பாடம் முடியுமட்டும் எழும்பி நில்லுங்கோ..." ரீச்சர் கோபத்துடன் சொன்னர். பிள்ளைகளுக்கு அது சந்தோஷமான செய்தியாக இருந்தது ரீச்சர் கொழும்பில் இருந்து யாரோ கொண்டு வந்த குமுதம் பத்திரிகையை ஊன்றிப்படிக்கத் தொடங்கினார்.

பாடசாலைப் பியோன், வெளிநாட்டுக் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்த போது, பரிமளம் ரீச்சர் 'குமுதத்தை, மேசையில் போட்டுவிட்டு கடிதத்தை ஆவலோடு படித்தாள். மகன் சுவீஸில் இருந்து எழுதியிருந்தான்...

...அம்மா அகதி என்று பதிய இன்னும் நிறைய அத்தாட்சிகள் வேண்டுமாம் — சில வேளை திருப்பி அனுப்பிப் போடுவார்களோ தெரியாது...

பதறிய நெஞ்சுடன் பரிமளம் ரீச்சர் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். ★ ★ ★

## மாம்பழம் சாப்பிடுங்கள்

மாம்பழத்திற்கு இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மை உண்டு. உடல் பலத்தை தருகிறது. நோய் வராமல் தடுக்கிறது. மாம்பழம் உண்பதால் பல்வலி ஈறுவீக்கம் முதலியவை குணமாகிறது. மாலைக்கண், கண்ணில் நீர்வடிதல், சுண எரிச்சல், குறைகிறது மாம்பழம் நரம்புத் தளர்ச்சியை நீக்கும. தோல் சுருக்கத்தை மறைய வைத்து, உடம்பைப் பளபளப்பாக்கும

# சாதனம்

சாரதி

## பாசநிலாவும், ஏ. ஈ. மனோகரனும்

இலண்டன பீ. பீ. சியில் செய்திகள் வாசித்து வந்த ஏ-ஈ-மனோகரன் அவர்கள் இலங்கையிலும், தமிழீழத்திலும் அன்று பொப்பிசையில் கொடிகட்டிப் பறந்தவர். இவர் முதலில் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட பாசநிலா என்னும் 16 மி மீ வண்ணச் சினிமாப் படத்தில் கதாநாயகனாக நடித்தவர். இப்படத்தில் துணை நடிகராக நடித்தவரும், யாழ் குடாப் பிரதேசத்தில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிகளை முன்னின்று நடத்தியவருமான இளையண்ணை என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட இ. இளையதம்பி அவர்கள் அண்மையில் காலமானார்.

## உண்மைகள்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அரிய இலக்கண இலக்கிய நூல்களைப் புதுக்கியும், திருத்தியும், உரையெழுதியும் தந்துள்ளார். இவற்றுள் இவர் எழுதிய தமிழ் புலவர் சரித்திரம் இந்தியாவில் பல்கலைக் கழகப் பாடநூலாக இருந்தமை குறிப்பிடத்தக்கது

டாக்டர் மு. வாதராசன் அவர்கள் எழுதிய திருக்குறள் தெளிவுரை என்னும் நூல் ஏழு இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இதைச் சைவசித்தாந்தக் கழகத்தினர் பதிப்பித்தனர்.

ஈழத்தில் ஒரு தமிழ் நாடகம் இரண்டாயிரம் தடவைகள் மேடையேறினதென்றால் ஆச்சரியம்தான். நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் அரிச்சந்திர மயானகாண்டம் என்ற நாடகமே இத்தகைய நிலை ஏறியது.

## கடல்கடந்த நாட்டில் நாவலருக்குச்சிலை

நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு டில்லி நகரிலே சிலை எடுத்தார்கள். இவ்வகையாகத் தமிழர்கள் பெருமை கொள்ளத்தக்க வகையில் இருந்த நாவலர் அவர்கள் சிதம்பரத்திலே அமைத்து நடத்திவந்த பாடசாலை இன்று உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப்பள்ளிக்கு அண்மையில்எழுத்தாளர் நந்தி அவர்கள சென்று வந்தார் எழுத்தாளர் நந்தி அவர்களின் பெயர் எஸ். சிவஞான சுந்தரம் என்பதாகும். டாக்டர். எஸ் சிவஞானசுந்தரத்தின் பெயரை நந்தி என்ற புனை பெயரில் எழுதும்படி கூறியவர் ராஜாஜிஎன்று அழைக்கப்படும் திரு. கோபாலாச்சாரி அவர்களாகும்.



## பெரியோருக்கு விபுலானந்தர் எழுதிய கடிதம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர் திரு. க. கணபதிப்பிள்ளையவர்கள். அவருக்குச் சுவாமி விபுலானந்தர் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்



"நானாடகமும், காதலி ஆற்றுப்படையும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். பொருளோ பொருள் எனப் பெயரிய மற்றுமொரு நாடகம் அண்மையில் அரங்கேறியதாக ஈழகேசரியில் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும், ஒரிரண்டு நாடகங்களிலே படம் பிடித்து வைப்பது நன்று விஜய தசமி வாழ்த்துரை கூறி முடிக்கிறேன்.

இங்ஙனம்
விபுலானந்தர்




இந்தப்பகுதி சிரிப்பதற்காக மட்டுமே இங்கே வருபவை. முழுக்க முழுக்க எனது உடமையுமல்ல நான் படித்தவை - கேட்டவை - அனுபவித்தவை சுவைத்தவை.

## டாக்டர் மருந்து தாங்க!

**டாக்டர்:** என்ன சுகமில்லையா? யாரிடமாவது காட்டிப்போட்டுத் தானே இங்கு வந்திருப்பாய்?

**நோயாளி:** ஆமாம், டாக்டர் ஒரு வைத்திய மாணவனிடம் காட்டினேன்.

**டாக்டர்:** அவன் முட்டாள் தனமாக ஏதாவது உளறி இருப்பானே!

**நோயாளி:** சரியாகச் சொன்னீர்கள் டாக்டர், அவன் உங்களிடம் சென்று காட்டும்படி கூறினான்.

## சர்ச்சிலின் வாழ்வில் -

வின்சன் சர்ச்சில் பிரதமராக இருந்த போது ஒருமுறை பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். அவரை அழைத்துச் சென்றிருந்த டாக்டர், சிகிச்சை முடிந்து வெளியே வந்த ஒருவரைக் காட்டி ''இவன் மனநிலை பாதிக்கப்பட்டு

பைத்தியமாக இங்கு வந்திருந்தான். இப்பொழுது பூரணசுகம் பெற்று வெளியேறுகின்றான்'' என்றார். வின்சன் சர்ச்சில் அவருடன் பேச விரும்பி, அவரிடம் ''என்னைத் தெரிகின்றதா? என்று கேட்டார் அவர் தனக்குத் தெரியவில்லை. என்றார். அப்பொழுது வின்சன் சர்ச்சில் ''நான் தான் இந்த நாட்டின் பிரதமர்'' உடனே அவர் ''நானும் இங்கு வரும் பொழுது இப்படித்தான் கூறிக்கொண்டு வந்தேன் ஒரு வாரம் மருந்து எடுத்தால் எல்லாம் சரியாகிவிடும் — சீக்கிரமாக உள்ளே போங்கள் என்றாராம்

## வர - வேற்கிறது

எனது நண்பன் நீண்ட காலத்திற்குப் பின் யாழ்ப்பாணம் வந்திருந்தான்



என்ன இவ்வளவு நாட்களும் ஏன் வரவில்லை? என்றேன்.

அவன் அதற்கு ''முன்பு யாழ்ப்பாணம் வரவேற்கிறது'' என்ற அறிவிப்புப் பலகை எல்லையில் இருக்கும். - வந்தால் மகிழ்வாக இருக்கும். இப்பொழுதோ யாழ்ப்பாணம் வரவேர்க்கிறது பம்பர் அடி செல்அடியை நினைத்தால் என்றான்.

## வத்தவிட்டு - வரவேணும்

அது சரி, இப்பொழுது எங்கே இருக்கின்றீர்கள்? என்றேன். ''அளவெட்டியில் இருந்து இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் இருக்கிறோம். எங்கள் வீட்டுக்கு வரும் பாதை ஒரே வெள்ளம் - வருவதாக இருந்தால் வத்தவிட்டுத்தான் வரவேண்டும். அதாவது வத்தை (Board) விடவேண்டும்'' அல்லது வெள்ளம் வற்றி விடவேண்டும் என்றான்.



# அறிவு ஏணி



சு. சி. ராதை

கேள்வி: இப்போது எமது நாட்டில் காய்ச்சல் இருக்கிறது. போர்க் கால சூழலில் வரும் இவ்வியாதி பற்றிச் சற்றுக் கூற இய லுமா?

செல்வி சு. யாழினி. யா / வேம்படி மகளிர் கல்லூரி

பதில்; காச்சலைப் பற்றிக் கூறுகின்றீர்கள். தடுப்பு மருந்துகளினால் மட்டும் இவ்வியாதி தீர்ந்துவிடாது சுற்றுப்புறத் தூய்மை அவசியம் 1896 ஆம் ஆண்டில் பிளேக் நோய் பம்பாய் நகரத்தையே ஒரு கலக்குக் கலக்கியது. ஆயிரக் கணக் கானோர் அந் நகரைவிட்டு வெளியேறினர். பிளேக்நோயால் தாக்கப்பட்ட எலிகளிடமிருந்து ஒருவகையான ஈக்கள் மூலம் இந்நோய் பரவுவதைக் கண்டுபிடித்த ஆய்வாளர்கள் ஈக்களை ஒழித்தார்கள். சாக்கடைகளைத் துப்பரவு செய் யச் சொன்னார்கள்.

17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து நாட் டில் இந்நோய் வந்தபோது இங்கிலாந்தின் நிலை பரிதாப மாகவிருந்தது. நகரின் தெருக்களில் கழிவு நீரும், குப்பை களும் சாதாரணமாகக் காணப்பட்டன. சுற்றுப்புறத் தூய்மையை எட்வின் சாட்விக் போன்ற பெரியவர்கள் வலியுறுத்தினார்கள் – அனால் அப்போதைய இங்கிலாந்து அரசு அவருக்கு தகுந்த உதவி அளிக்கவில்லை. தேம்ஸ்

நதியும், லண்டன் நகரும் நாற்றம் எடுத்தது. லண்டன் பாராளுமன்றத்தில் பிளிச்சிங் பவுடர் நனைத்த துணிகள் தொங்கவிடப்பட்டன. 1848ம் ஆண்டு லண்டனில் பொதுச் சுகாதாரச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

கொடிய நோய்கள் பரவாமல் இருக்கத் தகுந்தவழி சுத்தமான குடிநீர், நிரம்பிய சுகாதாரம், துப்பரவு, கழிவு களை எரித்தல், சிறந்த கழிவுநீர் வெளியேற்றும் வசதி இவற்றைச் செய்வதேயாகும்

இப்போது யாழ் குடாநாட்டில் மலேரியாக் காய்ச் சலே பரவுகின்றது. இந்நோயை உருவாக்கும் நச்சுக்கிருமி யைக் கண்டுபிடித்தவர் ரோணால்ட் ரொஸ் என்ற அறி ஞராகும்.

• •

**கேள்வி:** தூங்கும்போது குறட்டை விடுவதைத்தடுக்க முடியுமா?
**செல்வன். சி. றோமன், யாழ் / இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்**



**பதில்:** குறட்டை விடுவதற்கு முக் கிய காரணம் வாய் வழியே மூச்சுவிடுவதாகும் இதனால் உள்நாக்கு அதிர்வதையே குறட்டை என்கின்றோம். மேலும் அடினாய்ட்ஸ் வளர்ச்சி அல்லது மூக்கு வழியில் சிறிதளவு அடைப்பு அல்லது வேறு காரணத்தால். வாய் வழியே மூச்சுவிட நேரிடலாம் இதனாலும் குறட்டை ஏற் படலாம். இதைத் தடுப்பது என்பது பழக்கத்தை மாற்றிக் கொள்ளச் செய்வதாகும். வாய்வழியே மூச்சு விடுவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துச் சொல்லிப் படிப்படியாகக் குறைத்து பழக்கத்தை மாற்றுவதால் தடுக்கலாம்.


•

**கேள்வி:** மின்சாரம் தாக்கியவுடன் மனிதர்களுக்கு ஏன் அதிர்ச்சி ஏற்படுகிறது?
**செல்வன்:** பிரதீபன், யா/புனித சம்பத்தரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

பதில்: நமது உடல் எண்ணற்ற கலங்களாலானது. ஒவ்வொரு கலமும் கலமென்சவ்வால் மூடப்பட்டிருக்கும் கலத்தினுள் கலவுரு எனும் திரவம் உள்ளது இந்த முதலுருவில் உப்புக்கள் அயன் வடிவிலிருக்கும் (எ . கா $NaCl \rightarrow Na^{+} Cl^{-}$) ரத்தத்திலும் உடல் திசுத்திரவத்திலும் அலங்கக உப்புக்கள் அயன் நிலையில் கரைந்துள்ளன. இந்த உப்புக்களின் தன்மை மாறாமல் பாதுகாக்கப்படுகின்றது. நம் உடலின் நரம்புக் கலங்களில் இந்த அயனிகள் முனைமாற்றம் ஏற்பட்டு அது அலைபோல் பரவுகிறது இக்குணம்தான் நரம்புக் கலங்களின் செயல்களுக்கு அடிப்படையாக விளங்குகிறது. மேலும் கலச்சவ்வு அதிகமான மின்னனு எதிர்ப்புச் சக்தி கொண்டது (மின்சாரம் என்பது மின்னணுக்களின் ஓட்டம் என்பதை நினைவில் கொள்ளவும்)

இந்தத் தன்மைகளால் நமக்கு மின்சாரம் தாக்கிய உடன் கலச்சவ்வின் மினினனுத்தன்மை பாதிக்கப்பட்டு அதே சமயத்தில நரம்புக் கலங்களில் முனைமாற்றம் ஏற்பட்டு அதிர்ச்சி ஏற்படுகின்றது. மின்சாரம் பாயும்போது நம் உடல் ஒரு மின்தடையாக செயல்ப்படுகிறது. அப்போது மின் இணைப்பு கொடுக்கப்பட்ட இடம் மற்றும் அதன் பாதையிலுள்ள உறுப்புக்களில் தீக்காயம் ஏற்படுகின்றது.

★★




கேள்வி: செயற்கைக் கோள் எவ்வாறு ஒலிபரப்பிற்குத் தொடர்பு சாதனமாகப் பயன்படுகிறது?

தர்சினி யா/இந்துமகளிர் கல்லூரி

பதில்: பூமியிலிருந்து சுமார் 36,000 கி மி செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டு, நிலையாக உள்ளவைபோல் சுற்றுகின்றன. பூமியிலிருந்து அனுப்பப்படும் மின்காந்த அலைகளை இவை பெற்று, பெருப்பித்து மீண்டும் பூமிக்கு அனுப்புகின்றன. இதனால் நிகழ்ச்சி தெளிவாகின்றது

## மிகவும் பழைய கல்லாயுத மனிதனின் தோற்றம் குறித்து மேலும் சில தகவல்களைத் தருகின்றது

எத்தியோப்பியாவில் உள்ள கோளா ஆற்றுக்கு அண்மையில் எடுக்கப்பட்ட கல்லாயுதம் 2.6 மில்லியன் ஆண்டுகள் பழமையான தாகும். இதற்கு முன்னமே கண்டுபிடிக்கப்பட்ட கல்லாயுதமானது 2.3 மில்லியன் ஆண்டிலிருந்து 2.4 மில்லியன் ஆண்டுகள் பழமையான தாகும். இவ்வாயுதமும் எத்தியோப்பியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஒமோ ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டது.

மூன்று மில்லியன் ஆண்டிலிருந்து இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் மனிதனின் கூர்ப்பில் மிக முக்கிய கால கட்டமாகும்.

2 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் காலநிலை வரண்டதாகவும், குளிர்மையானதாகவும் மாறியது. இதனால் ஆபிரிக்காவிலிருந்த காடுகள் அழிந்து திறந்த பெருநிலப்பரப்புக்கள் உருவாகின.

இது பல உயிரினங்களுக்கு உணவு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கக்கூடும், கல்லாயுதத்தின் தயாரிப்பு உணவுமுறையின் மாற்றத்தைக் காட்டுகின்றது என்று டாக்டர் கரிசு என்பவர் கூறுகின்றார். பல ஆண்டுகளுக்கு முன்னர் கேடருக்கு அண்மையில் எலும்புகள் அடங்கிய புதைப்படிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிவமானது மூன்று முதல் 4 மில்லியன் ஆண்டு பழமையானதாகும்.

இவ்வுயிரினங்கள் இரு கால்களில் நடந்தன. இவற்றுக்குச் சிறிய மூளையே இருந்தது. ஆனால் இவை கல்லாயுதங்களைச் செய்தன என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை.

கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதத்தின் காலத்திற்குரிய கொமினிட்டின் ( Hominid ) புதை படிவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ஆனால் இவற்றை எந்த உயிரினம் செய்தது என்பது குறித்து ஆய்வாளர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

தகவல்:

INTERNATIONAL HERALD TRIBUNY

23 - 09 - 1993

# எங்கள் ஊர்

அ. சா. அரியகுமார்

## சுண்டிக்குளம்

ஏழுமைல் நீளமுள்ள கடலோர நிலப்பகுதியை அடக்கியுள்ள செழிப்பு மிகுந்த கடலோரத்துச் சிற்றூர் இதுவாகும். பறவைகளின் சரணாலயமான இவ்விடத்தில் வாழ்ந்த ஏழே ஏழு குடும்பங்கள் வயிரவர் கோயிலொன்றை அமைத்திருந்தனர். 1964ல் திறக்கப்பட்ட உபதபால் நிலையமும் இருந்தது: பளையிலிருந்து பெறும் தபால்ப் பொதியை முள்ளியான் என்ற ஊரிலிருந்து எடுத்துக்கொண்டு தபாற்காரர் கால் நடையிலேயே அஞ்சலைச் சுண்டிக்குளத்திற்கு கொண்டு செல்வார்.

1940ம் ஆண்டுகளில் இங்கு பல குடும்பங்கள் வாழ்ந்தனர் மக்கள் அதிகளவு வாழ்ந்தமைக்கான சான்றுகளாகப் மிகப் பழைமை யான காயுள்ள பூவரசு மரங்கள், நிறைந்தளவு சட்டி பானை ஒடுகள், கரித்துண்டுகள் இவ்விடத்திற் காணப்படுகின்றன: காலப்போக்கில் கட்டைக்காடு, கண்டாவளை ஆகிய இடங்களை நோக்கி மக்கள் நகர்ந்தார்கள் என்று செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு மக்கள் நகர்ந்த போதிலும், மீன்பிடிப் பருவகாலத்தின் போது கடற்றொழிலாளர்கள் இவ்விடத்திற்கு வந்து மீன்வாடிகள் அமைத்து தொழிலில் ஈடுபடுவர். அவ்வேளையில் சிங்கள மீன்பிடி காரர்கள் நீர்கொழும்பிலிருந்து வருவார்கள். தொழில் ரீதியான போட்டிகளும், சண்டைகளும் அவ்வேளையில் ஏற்படும்.

---

யாழ் மருதங்கேணி

இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்தின் அதிபர்

அ. சா. அரியகுமார் ஆசிரியர்

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்து ஊர்களின் சிறப்பைக்

கட்டுரை வடிவில் எம்முன் நிறுத்துகின்றார்.

தேசியம் இதழுக்கு இச் சிறப்புச் செய்தியை தருவதில்

ஆசிரியர் ஏ. டி அரியரஞ்னின்

ஊக்கம் மறக்க முடியாதது.

1965ல் பாஸ்வெண்டக்கோன் என்னும் தமிழர் சுண்டிக்குளத்தின்முதல் கிராம சேவையாளரானார். அதற்கு முன்பு விதானைமாரின் தெரிவுமுறை பரம்பரை வழியாக ஒரு குடும்பத்திலேயே தங்கியிருந்தது. விட்டப்பூச்சிகள் வாழும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களும் விசகடிவைத்தியம் செய்யும் வைத்தியப் பரம்பரையினர் இன்னும் உள்ளனர். கிளிநொச்சித் தொகுதியுடன் இணைந்திருந்த இவ்வூர், 1977ல் பருத்தித்துறை தொகுதியுடன் சேர்க்கப்பட்டது.

கமறாள முதலாளி,

1977ம் ஆண்டின் முன்பு இங்கு வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களோடு, சில சிங்களக் குடும்பங்கள் குடியேறினர். கமறாள என்ற மீன் முதலாளி தன் பிள்ளைகளுடன் வந்து நிலத்தைப் பிடித்து வயல் செய்தான். தமிழர்கள் பிடிக்கும் இறால்களைக் கொள்வனவு செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்தான். இவனின் கைவசமாக வேட்டைத் துவக்கு இருந்தது. சிறி லங்காவின் அரச காவல்துறையினரும் இவனோடு நண்பர்களாயினர். இவைகளினால் இவன் தொழில் இலாபத்தை விரைவாகப் பெற்றான். 1977ல் நடந்த இனக்கலவரத்தின் போது சிறி லங்காக் காவல்துறையின் உதவியோடு தன்னூருக்குக் கமறாள சென்று விட்டான்.

1977ம் ஆண்டில் பொதுத் தேர்தலின் போது இங்குள்ளவர்களின் ஏழுவாக்குகளைப் பதிவு செய்வதற்காக ஒரு வாக்குச் சாவடி அமைக்கப்பட்டது. இரண்டு ஜீப்வண்டியில் 14 உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்களத்திலிருந்து வந்தார்கள். பாலைப் பழம் பழுக்கும் பருவகாலத்தில் இங்கு குடும்பங் குடும்பமாகப் பலரும் வருவர் - கரைவலைத் தொழில் தாராளமாக நடக்கும்.

1993ன் பின்பு வெற்றிலைக் கேணியிலிருந்து 13 மைல் தூரத்திலிருக்கும் இவ்விடத்தில் மக்கள் இப்போது அதிகமாகவுள்ளனர் இடம் பெயர்ந்து ஏக்கங்களுடன் இருக்கும் எம் மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கவென - கடற்புலிகள் ஒருபாடசாலை அமைத்துள்ளனர். சுண்டிக்குளத்துத் தெற்குக் களப்பில் உப்பு விளையும், இவ்வுப்பும் இங்கு பிடிக்கப்படும் இறாலும், இங்குள்ள இயற்கையான காடும் எம்மனதை நிறைப்பன.□□□

(வளரும்)

# நாட்டு மருந்து

ஏழாலை - ஏ. ஆர். கிருஸ்ணசாமி

**மூச்சு விட முடியாமல் திணறும் கொடியநோயோடு இருக்கும் பலர் வரட்டு இருமலுடன் பரிதாபகரமாகத் திணறுவதையும், இடர்படுவதையும் நாம் தினமும் காணக் கூடியதாகவுள்ளது. இதற்கு ஏற்ற சில மாற்று வழிகள் இப்பக்கத்தில் காண்போம். □□□**

சித்த வைத்தியத்தின் மூலவேராக வாழ்ந்த சித்தர்கள், மனிதர்களின் நோய்களுக்கான தீர்வை, எளிமையான முறையில் தீர்ப்பதற்கு வழிகளைத் தந்துள்ளார்கள். நாம் காணும் செடி கொடிகளின் மூலகங்களை மருந்தாக மாற்றும் திறன் கொண்ட சித்தர்களின் மருத்துவமானது தந்த சில மருந்துகளின் விபரங்களைக் கீழ்க்காணலாம்.

## வரட்டிருமல் உள்ளவர்களுக்கு பயனுள்ள சில மருந்துகள்

✠ அதிமதுரம், கடுக்காய், என்பவற்றைச் சம அளவில் எடுத்து வறுத்து, பொடிசெய்து வெருகடி அளவு மருந்தைத் தேனில் குழைத்துச் சாப்பிடவும், சளியும் இளகும், இருமலும் குறையும்.

✠ சிற்றரத்தை, திற்பிலி, அதிமதுரம் இவற்றில் இரு களஞ்சி வீதம் எடுத்து வெண்ணை போல் அரைத்து, காற்படி (ஒரு தம்ளர்) நீர்விட்டு நன்றாகக் காய்ச்சி ஒரு நாளைக்கு நாலுதடவை - வேளைக்கு ஒரு மேசைக்கரண்டி வீதம். தேனுடன் கலந்து குடித்து வந்தால் இருமல், கோளைக்கட்டு, தலையிடி, உடல்வலி, குத்து இருமல் தீரும்:

✠ ஆடாதோடை இலையைச் சிறுதுண்டுகளாக நறுக்கி பிட்டு அவிப்பது போல் அவித்துப் பிழிந்து 10 அல்லது 12 துளிச் சாற்றில் சிறிது தேன் விட்டு தினமும் 4 வேளை குடிக்க காமாளை, இளைப்பு, காய்ச்சல் இரைப்பு இவைகள் தீரும்! □□□

கவிதை

# பேசி மகிழ்ந்து கூவுது

நெஞ்சில் சுழன்று கோடி நினைவுகள்
மிஞ்சி மிஞ்சித் தோன்றுதே
பிஞ்சுக்குயில்கள் என்னைத் தொட்டு
பேசி மகிழ்ந்து கூவுதே

திங்கள் முகத்தினைப் பார்த்து
தங்கள் செவ்வாய் விரித்திடும் முல்லை
எதிர் காலத்துச் செல்வங்களாகும்
எமைக் காத்திடும் வீரர்களாகும்.

அறநெறி ஓங்கிடச் செய்வோம் — அதில்
அன்பினை ஊட்டியே வெல்வோம் — என்
உறவுகள் நல்லவைதானே — அவற்கு
உயிரையும் ஈகுவன் நானே.


நாளைய நாயகர் ஆகிய பிள்ளைகள்
நம்முடன் ஒன்றாக வாழும் — என்றும்
நாட்டின் எழுச்சிக்கு எம்மாலே ஆகின்ற
நல்ல பங்களிப்பினைச் செய்யும்.

செல்வி. இராசையா ரேணுகாதேவி
(கரவெட்டி சிறுவர் ஆசிரியர் பயிற்சித்துறை நிலையப் பொறுப்பாளர்)

# முல்லைத்தீவு

மாங்குளம் ஒட்டிசுட்டான்
மருவான கற்சிலையும்
தேன்கமழும் முத்தையன்கட்டு
திருமுளியவளையும்
பாங்கமழும் தண்ணியூற்று
பண்புவற்றுப்பளையும்
பூங்கமழும் முல்லைத்தீவும்
புகழ் சூழ முனையதுவும்
கொக்குத் தொடுவாயும்
கொக்கிளாய் நாட்டுக்கேணி
திக்கண்டான் குளத்தளகும்
திகழ் புதுக்குடியிருப்பு
மிக்க புகழ் விஸ்வமடு
மிளிர் வன்னி விளாங்குளம்
பக்கமாய் பனங்காமம்
பரவு நாட்டான்கண்டல்
பாண்டியன் குளமதுவும்
பரந்திடு செல்வபுரம்
ஆண்டருள் சிவபுரமும்
அருள் யோகபுரம் மல்லாவி
வேண்டிய துணுக்காயோடு
விளங்கிடு கல்விளானும்
தாண்டிய ஆலங்குளம்
துலங்கிடு உயிலங்குளம்
தென்னியங் குளமும் தெய்வ
திரு வழ முறி கண்டியும்
நன்னலப் புத்துவெட்டுவானும்
நல்லதொரு முறிகண்டி
தன்வைக் கிராமம் சூழும்
நாடதாம் கல்வி செல்வ
வன்னி நாடென்னும் முல்லை
வளம் பெறும் எங்கள் நாடே.

இலங்கை
நிருவாக
சேவையிலிருக்கும்
திரு. த. மார்க்கண்டு
அவர்களின்
விருப்பிற்கு
சிவத்திரு.
ந. வீரமணிஐயர்
எழுதிய - கவிதை



# நேர்காணல்

## ஜனசக்தி சனசமூக நிலையத்தோடு

அரசடி வீதியால் நல்லூர் முருகன் கோயிலுக்குப் போகும் மக்கள் பிரதான வீதியிலுள்ள ஜனசக்தி சனசமூக நிலையத்தைப் பார்க்க முடியும். 6 - 2 - 94 அன்று மாலை நேரத்தில் தேசியம் இதழ் முக்காகிய செய்தித் தேடலுக்குச் சென்றபோது நிலைய நிர்வாகிகள் மூலம் அறிந்த சில தகவல்கள்

---

தலைவர்: செல்வன் ஸ்ரீதரன்
உபதலைவர்: திரு. கி. குமாரசுவாமி
செயலாளர்: திரு. எஸ் பரமராசா
உபசெயலாளர்; செல்வன் சி. மோகனதாஸ்
பொருளாளர்: செல்வன் சி. சுதர்சன்

---

1 - ஜனவரி 1948ல் ஆரம்பமான இந்நிலையத்தின் முன்னோடிகளாக சரவணை பூவிலிங்கம் சரவணை முத்துலிங்கம், முருகேசு இராசு என்போர் மதிக்கப்படுகின்றனர் 1957 முதல் 1975 வரை தினகரன் செய்தி இதழை திரு, சீ. சிவகுருவும், 1990 வரை வீரகேசரி இதழைத் திரு. சி. சின்னராசாவும் அன்பளிப்புச் செய்துள்ளனர்; அமரர்களான இவர்களை இன்றைய சனசமூக நிலைய நிர்வாகிகள் நினைவு கூர்ந்தனர்.

1958 முதல் 1992 வரை சண்முகம் இராசையா அவர்களின் உழைப்புத்திறனும், இவ்வூரின் 100 குடும்பங்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பும், இந்நிலையத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருக்கின்றது

1983ல் மாதர் சங்கம் தோன்றியது. இதன் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டவர் சிவகுரு சரஸ்வதி அவர்கள். நிலையத்தின் எல்லாவித அக்கபூர்வ நடவடிக்கைகளிலும் மாதர் பகுதியினர் மிகுந்த அக்கறை காட்டி உழைத்து வருகின்றனர்.

ஜனசக்தி சனசமூக நிலையம் அமைந்துள்ள காணியைப் பற்றிய கதை வந்தபோது; வல்லிபுரம் தம்பிமுத்து அவர்களின் உதவியினாலே இந்நிலம் கிடைத்தது என்பதையும்; தெரிந்து கொண்டோம்.

---

கலைச்செயலாளர் செல்வன் செ. நித்தியானந்தமூர்த்தி
கல்விப்பொறுப்பாளர் செல்வி சி. இநதிராகாந்தி
நூலகபபொறுப்பாளர் - திரு இ. இரவீந்திரராசா
மரண ஆதார சங்கப் பெறுப்பாளர் – செல்வன். மு. சிறீரூபன்
நிலையப்பெறுப்பாளர் - செல்வன். இ சதீசன்

---

மேலும் சில தகவல்கள்:

★ 1978 முதல் இலவசப் பாலர் பாடசாலை
★ யாழ். மாநகரசபையின் ஒத்தாசையில் கிடைத்த காணியில் 1989 முதல் சிறுவர் பூங்கா அமைத்தலும், நடத்துதலும்
★ 1958 முதலாக இன்றுவரை மக்களுக்குப் பொது நூலகசேவை
★ கலை, விளையாட்டு, கல்வி, நூலகம் ஆகிய துறைகளுக்குத் தனித் தனிப் பொறுப்பாளர்கள்.
★ ஒவ்வொரு நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து பதினைந்து ரூபா வீதம் பெற்று (மரண ஆதனச் சங்கம்) இடருதவி
★ மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு இலவசக் கல்வி

---

மாதர் சங்கத் தலைவி: திருமதி செ. ஈஸ்வரி, தலைவர்
செல்வி மு. ரூபகாந்தி, செயலர்
செல்வி பி. இராசேஸ்வரி, பொருளாளர்

---

இவை போன்ற பல சேவைகளை ஜனசக்தி சனசமூக நிலையம் செய்வதை அறிந்தோம்.

மு. இ. யோ

# தலைநகர்

[கையெழுத்துச் சஞ்சிகை இரு இதழ்கள்]

வெளியான காலம்: 16 வைகாசி 1993, 26ந் திகதி கார். 1993

வெளியீடு: திருமலை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம்

ஆசிரியர்: மா. புவனேந்திரராசா

தென்தமிழீழத்தில் காம் வாழ்ந்த செழுமையான வாழ்வை இழந்து இடம் பெயர்ந்து இங்கு வாழ்கின்ற போதும் தாம்வாழ்ந்த மண்ணின் நினைவாகவும், வாழ்ந்த மக்களின் நினைவோடும் செய்யப்படுகின்ற இலக்கிய நன் முயற்சியான இப்படைப்புக்கள் இரண்டிலும் மனங்கொள்ளத்தக்க பல செய்திகள் நிரம்பியுள்ளன.

'' பாறை இடமென்று பார்ப்பவர்கள் சொல்லுவது
மெச்ச இடமுண்டு மேன்மை கொள்விவசாயம்
நல்ல கொச்சுகத்தரி போன்ற செழிர்த்து வளர் கறியினங்கள்
இங்கு தப்பாமல் பலன் தருமே '' — என்று ரவி பாடலிலே கூறியுள்ள தம்பலகாமத்தை (சிற்றூர்) விட்டு மக்கள் 1990 யூன் 8ந் திகதி வெளியேறிய நிகழ்வைச், சாந்தபுரம் க. சா. அரியநாயகம் வேதனை தரும் இடம்பெயர்வு என்ற ஆக்கத்தில் வெளிப்படுத்துகின்றமை நெஞ்சைத் தொடுகின்றது.

'' ... மறுநாள், கிராமத்திற்கு அப்பால் வயல் வெளிகளுக்கு அணித்தாகவுள்ள இலங்கை வானொலி அலைவரிசைக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக, இரு பெண் பிள்ளைகளும் இராணுவத்தின் கொடுமைக்குள்ளாகி கொலை செய்யப்பட்டமை நிகழ்வைச் செல்வி மு. அழகேஸ்வரி ,,கந்தலாய் மண்ணில் படுகொலைகள் என்ற படையல் தரும்போது -

செல்வி மயில்வாகனம் இராஸ்வரியின் பசுமையான முகம் அவளின் பண்பு நிறைந்த வார்த்தைகள் நிழலாடுகின்றது — எமது கண்கள் பனிக்கின்றன.

தலைநகர் இதழானது பல நல்ல விடயங்களைத் தொகுத்துத் தருவதில் தன்னை மேம்படுத்திக் கொள்கின்றது.

- மானுடன்

வடமராட்சிக் கிழக்கு மக்களுக்கு
கூட்டுறவு முறையிலான
சேவையைக் கொடுப்பவர்கள்

குறைந்த வருடங்களில்
குறிப்பிட்ட வகையில்
முன்னேற்றம்

மக்களுடன் ஐக்கியம்;
மக்கள் வளர்ச்சிக்கு உதவி

# வடமராட்சிக் கிழக்கு
# பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்

கூட்டுறவே நாட்டுயர்வு
கூடிவாழ்வது கோடிநன்மை
என்பது எங்கள் எண்ணம்.

COPHARM

கோபாம்

மதயானையின் பலத்தை
வேங்கை அடக்கும்
எந்த நோயையும்
சித்தவைத்தியம் தீர்க்கும்

## சித்தவைத்தியக் கூட்டுறவுச் சங்கம்

சிறந்த மருந்துகளை உருவாக்குகிறது.

